O.S. No. 28/2013 நாள். 28.09.2022

PW1 – திரு. மரியசூசை

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் சர்வே எண்.239 என்றால் சரிதான். சர்வே எண்.239 என்பது கருங்குடி கண்மாய் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கருங்குடி கண்மாயில் 8 மடை உள்ளது அதில் ஒரு தூம்பு மடையில் உள்ள ஒரு பைப்பை பிரதிவாதிகள் ஜேசிபி மூலமாக அப்புறப்படுத்தி விட்டதால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தூம்பு மடையில் ஒரு அடி அளவுள்ள ஒரு தூம்பு பதிக்கப்பட்டது என்றால் சரியல்ல 7 தூம்புகள் பதிக்கப்பட்டு இருந்தது. தூம்பின் அளவு ஒரு அடி இருக்கும்.

2. நான் எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 7 தூம்புகள் உள்ளன என்றும், அதில் ஒரு தூம்பை மட்டும் உடைத்து விட்டார்கள் என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நீதிமன்ற வழக்கறிஞர் தாவா சொத்தை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார் அளந்து அறிக்கை தாக்கல் செய்தார். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது 7 தூம்பை அடையாளம் காட்டினேனா என்றால் காட்டினேன். தாவா சொத்திற்கு தெற்கே அரசாங்கத்தால் கட்டப்பட்ட 7 மடைகள் உள்ளது என்றால் சரிதான்.

3. 7 மடைகள் புதுப்பிக்கப்பட்டதா என்றால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள தாவா சொத்தில் உள்ள கண்மாய் கரையில் உள்ள மடையை காட்டினேன் என்றால் நான் தூம்பை தான் அடையாளம் காட்டினேன். ஜேசிபி எதற்காக கொண்டு வந்து தோண்டி காண்பித்தீர்கள் என்றால் ஆணையர் பார்வையிட்ட போது தூம்பு தெரியவில்லை. நாங்கள் வெட்டி பார்த்தபோது ஆழத்தில் இருந்ததால் தூம்பு தெரியவில்லை எனவே ஜேசிபி கொண்டு வந்து தோண்டி பார்த்தோம்.

4. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது தூம்பு

இருந்ததா என்றால் உடைந்த பைப்புகள் இருந்தது. நான் எனது பிராதில் தாவா சொத்தை பொறுத்தவரையில் அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கருங்குடி கண்மாயின் அளவு எவ்வளவு என்றால் மொத்தம் 275 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்திற்கு தென்புறத்தில் உள்ள 7 மடைகளிலும் எண்கள் போடப்பட்டு இருக்கிறது என்றால் போடப்படவில்லை. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள 7 மடைகள் பொதுப்பணித்துறையால் கட்டப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

5. எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் கருங்குடி கண்மாயில் தண்ணீர் பாய்ச்சி வருவது சம்பந்தமாக மூதாதையர் காலத்தில் இருந்தே பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் தாவா சொத்தை நான் அடையாளம் காட்டியதுபோல பிரதிவாதிகள் குறிப்பிட்டு எதையும் அடையாளம் காட்டவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கே கருங்குடி கண்மாய் நீர்பிடி பகுதி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே வான்பயிர் புஞ்சை நிலங்கள் உள்ளது அதற்கும் கிழக்கே புஞ்சை நிலங்கள் உள்ளன.

6. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள 7 மடைகளும் கண்மாய் கரையில் நடந்து சென்றாலே தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தான தூம்பு மடை கண்மாய் கரையில் நடந்து செல்லும்போது தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு தெற்கே உள்ள 7 மடைகளுக்கு கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் செங்களால் கட்டப்பட்ட கட்டுமானங்கள் உள்ளதா என்றால் கட்டுமானங்கள் உள்ளது. மேற்படி 7 மடைகளிலும் உள்ள தூம்பின் அளவு எவ்வளவு இருக்கும் என்றால் 6 அடி நீளமும் 3 அடி விட்டமும் இருக்கும்.

7. கருங்குடி கண்மாயின் வடபுறத்தில் உபரி நீர் செல்லும் வகையில் கலுங்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். கருங்குடி கண்மாயின் வடபுறத்தில்

கலுங்கை தவிர வேறு தூம்போ கண்மாயோ இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்து கருங்கடி கண்மாயின் வடபுறத்தில் உள்ளது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கருங்குடி கண்மாயிக்கும் எங்கள் குடியிருப்பு பகுதிக்கும் மத்தியில் ஊரணி உள்ளதா என்றால் சரிதான். கருங்குடி கண்மாயில் இருந்து ஊரணிக்கு தண்ணீர் செல்லக்கூடிய வகையில் தூம்பு அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி தூம்பு அரசாங்கத்தால் வைக்கப்பட்டது என்றால் சரிதான், தாவா சொத்தும் அரசாங்கத்தால் வைக்கப்பட்டது.

8. தாவா சொத்து அரசாங்கத்தால் வைக்கப்பட்டது என்று நீதிமன்றத்தில் ஆவணமும் எங்களால் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி  தாவா சொத்து அரசாங்கத்தால் தான் வைக்கப்பட்டது என்றும் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாய்க்கால் உள்பட எஸ்எல்ஆர் காப்பி தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டிருப்பது எங்கள் குடியிருப்பிற்கான நஞ்சை நிலத்தின் எஸ் எல்ஆர்காப்பி என்றால் சரிதான். கண்மாய் நீர்ப்பாசனம் செய்யப்படும் பகுதியை ஆயக்கட்டு என்பார்கள் என்றால் சரிதான்.

9. ஆயக்கட்டுக்கு உட்பட்ட பகுதிகள் நஞ்சை நிலங்கள் மட்டுமா என்றால் நஞ்சை நிலங்களுக்கு மட்டும்தான் ஆனால் நாங்கள் புஞ்சை நிலங்களுக்கும் நீர் பாய்ச்சி கொண்டிருக்கிறோம். அரசாங்க விதிப்படி கண்மாய் நீர்பாசம் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் தான் என்றால் நஞ்சை நிலங்கள் இல்லாத பட்சத்தில் புஞ்சை நிலங்களுக்கு நீர் பாய்ச்சலாம் என்று சட்டம் உள்ளது. அது என்ன சட்டம் என்றால் அந்த சட்டம் எனக்கு தெரியாது. நஞ்சை நிலத்தில் நெற்பயிர் விவசாயம் செய்வார்கள் என்றால் அதுமட்டும் இல்லை அத்துடன் சேர்த்து பருத்தி, மிளகாய் போன்ற பயிர்களும் விவசாயம் செய்யப்படும். நஞ்சை நிலங்களில் நெற்பயிர் சாகுபடி செய்த பின்புதான் மிளகாய் போன்ற பயிர்கள் விவசாயம் செய்வார்கள் என்றால் சரியல்ல நெல் பயிரிடும்போது மிளகாய் போன்ற

பயிர்கள் பயிரிடுவார்கள்.

10. பருத்தி கோடைகால பயிர் என்றால் கோடைகாலத்திலும் விதைப்பார்கள் அனைத்து காலத்திலும் விதைப்பார்கள். கண்மாய் நீர்பாசனம் என்பது நெய்பயிருக்கு மட்டும்தான் பாய்ச்சப்படும் என்றும் பருத்தி, மிளகாய்க்கு பாய்ச்சப்படமாட்டார்கள் என்றால் சரியல்ல அனைத்திற்கும் பாய்ச்சப்படுவார்கள். கருங்கடி கண்மாயில் குடிமராமத்து பணியில் தூர் வாரப்பட்டதா என்றால் தூர் வாரப்பட்டது. கருங்கடி கண்மாயில் எத்தனை வருடத்திற்கு முன்னால் குடிமராமத்து பணியில் தூர் வாரப்பட்டது என்றால் கடந்த வருடம் தூர் வாரப்பட்டது.

11. குடிமராமத்து பணி அரசாங்கம் தான் செய்யும் என்றால் தவறு, நாங்கள் ஒவ்வொரு வீட்டில் இருந்தும் ஆட்கள் சென்று பணி செய்வோம். அவ்வாறு குடிமராமத்து பணி செய்வதற்கு பொதுப்பணித்துறையில் அனுமதி பெற்று செய்தீர்களா என்றால் அனுமதி பெறப்பட்டது பற்றி எனக்கு தெரியாது, ஊர் கூடி நாங்கள் கூட்டம் போட்டு முடிவெடுத்து அப்பணியை செய்வோம். மேற்படி கூறிய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுவது வழக்கம். அக்கூட்டத்தில் கருங்குடி கண்மாய் பாசனம் செல்லும் அனைத்து ஊர் மக்களும் கலந்து கொள்வார்கள். அத்தீர்மானம் பற்றி அக்கூட்டத்தில் யார் யார் பங்கு பெற்றார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றிய ஆவணத்தை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியும். தீர்மானத்திற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

12. குடிமராமத்து பணி மேலே கூறிய வகையில் எங்கள் முன்னோர்கள் காலம் முதல் செய்து வருகிறோம் என்றால் செய்து வருகிறோம். எங்கள் கிராமத்தில் நாங்களே கூடி கிராம தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்றோர்கள் தேர்ந்தெடுத்து கொள்வோம் என்றால் சரிதான். எங்கள் குடியிருப்பு சம்பந்தமாக

பொது காரியங்கள் தொடர்பாக அரசு அலுவலகங்களுக்கு கிராம தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்றோர்கள் செல்வார்கள் என்றால் சரிதான். முன்னால் பொருப்பாளரான சந்தியாகு மகன் ஜெபமாலை உயிரோடு உள்ளாரா என்றால் அவர் தற்போது உயிருடன் இல்லை.

13. ஜெபமாலை என்ன பொருப்பில் இருந்தார் என்றால் தலைவராக இருந்தார். ஜெபமாலை இறந்து 20 வருடம் இருக்குமா என்றால் 5, 6 வருடங்கள் தான் இருக்கும். ஜெபமாலை தலைவரா இருந்தது 30 வருடத்திற்கு முன்பு என்றால் தவறு 20 வருடம் தான் இருக்கும். ஜெபமாலை பொருப்பாளராக இருந்த காலத்தில் மோச்சம் மகன் சேசுராசு, சந்தியாகு, மிக்கேல் ஆகியோர்களும் பொருப்பாளராக இருந்தார்கள். மேலே கூறியவர்கள் பொருப்பில் இருந்த போது நான் பொருப்பில் இருந்தேனா என்றால் இல்லை. மேலே கூறிய நபர்கள் பொருப்பில் இருந்தபோது எங்கள் கிராமத்திற்கும் பிரதிவாதிகள் கிராமத்திற்கும் கண்மாய் நீர்பாசனம் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

14. மேற்படி பிரச்சனை சம்பந்தமாக இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதான கூட்டம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி சமாதான கூட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர், திருவாடானை வட்டாட்சியர், ஆர்.எஸ்.மங்களம் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, ஆர்.எஸ்.மங்களம் காவல் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் ஆஜரானர்கள் என்றால் வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி, பொதுப்பணித்துறை அதிகாரிகள் மட்டுமே இருந்தார்கள். அக்கூட்டத்தில் எங்கள் கூட்டத்தின் சார்பாக ஜெபமாலை , சேசுராசு, மிக்கேல், மரியசூசை, இருதயராஜ், அருளாந்து ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

15. பிரதிவாதிகள் சார்பாக சாத்தையா சேர்வை, அர்சுணன் தேவர், இராமநாதத்தேவர், காந்திதேவர், வீரையா சேர்வை, சாத்தையா தேவர்

ஆகியோர்கள் சமாதான கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். சமாதான கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது அது சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு அது சம்பந்தமாக எழுத்து மூலமாக எழுதி இருதரப்பினரும் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான். சமாதான கூட்டம் 1995ம் ஆண்டு நடைபெற்றது என்றால் அதைபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. சுமார் எத்தனை வருடத்திற்கு முன்னால் மேலே கூறிய சமாதான கூட்டம் நடைபெற்றது என்றால் சுமார் 15 ல் இருந்து 20 வருடங்களுக்குள் முன்னால் இருக்கும் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

16. மேற்படி கூட்டத்தில் கருங்குடி கண்மாயில் இருந்து எந்த தரப்பினரும் புஞ்சை நிலங்களுக்கு நீர் பாசனம் செய்யக்கூடாது என முடிவெடுக்கப்பட்டது என்றால் சரிதான். கருங்குடி கண்மாயில் உள்ள முதல் மடையை மறவர் தரப்பினரோ, உடையார் தரப்பினரோ தன்னிச்சையாக திறக்ககூடாது என்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் தான் திறக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்தார்கள் என்றால் சரிதான், ஆனால் முதல் மடைக்கும் மட்டும் அல்ல அனைத்து மடைகளுக்கும் தான். சமாதான கூட்டம் என்பது முதல் மடையில் ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாகத்தான் நடைபெற்றது என்றால் சரிதான்.

17. கருங்குடி கண்மாயில் 1வது மடைக்கு வடபுறம் உள்ள அனுமதிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள தூம்பை உடனடியாக அகற்றி கொள்ள வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு அனுமதியின்றி வைக்கப்பட்ட தூம்பை செயற்பொறியாளர் உதவியுடன் அப்புறப்படுத்த வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அனுமதிக்கப்படாமல் வைக்கப்பட்ட தூம்பை எடுப்பதற்கு உடையார் குடியிருப்பு பகுதி மக்கள் ஆட்சேபனை இருந்தால் உரிய ஆவணங்களுடன் அரசு அலுவலகங்களை அனுக வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

18. அதைவிடுத்து இத்தூம்பை பொதுப்பணித்துறை அகற்றுவதற்கு எவ்விதமான தடையிடர்களையும் ஏற்படுத்தக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கருங்குடி கண்மாய் நீரை புஞ்சை நிலங்களுக்கு பாய்ச்சி கொள்ள அனுமதி கேட்டு எவரும் கட்டணம் செய்யவோ, விண்ணப்பம் செய்யவோ கூடாது என முடிவெடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேலே கூறப்பட்ட சமாதான கூட்டத்தில் ஏற்பட்ட தீர்மானத்தின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை தொலைந்துவிட்டது. சமாதான கூட்டத்தை பற்றியோ அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியோ முதல் விசாரணை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சமாதான கூட்ட முடிவின் அடிப்படையில் பொதுப்பணித்துறையால் தாவா சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள தூம்பு அகற்றப்பட்டது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது)**